புரட்டாசி மாதம் மகாளய அமாவாசையை முன்னிட்டு மதுரை வைகை ஆற்றங்கரை சுவற்றில் தங்களின் முன்னோர்களுக்குத் தர்ப்பணம் கொடுத்தனர்.

மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் நவராத்திரி விழா

மதுரை, அக். 7–

மதுரை மீனாட்சி அம்மன் கோயில் 1431–ம் பசலி நவராத்திரி உத்சவம் இன்று முதல் (7–ந் தேதி) 15–ந் தேதி வரை நடைபெற உள்ளது.

10.10.2021 அன்று சாந்தாபிஷேகமும் அன்னாபிஷேகமும் நடைபெறும்.

மேலும் மேற்படி உற்சவ நாட்களான இன்று முதல் 15ந் தேதி வரை மாலை 6 மணிமுதல் மீனாட்சிஅம்மன் மூலஸ்தான சன்னதியில் திரை போட்டு அபிஷேகம், அலங்காரம் ஆகிய கல்பபூஜை மற்றும் சகஸ்ரநாம பூஜை போன்ற விசேஷ பூஜைகள் இரவு 8.30 மணி வரை நடைபெறும்.

எனவே மேற்படி பூஜை கால நேரங்களில் பக்தர்களுக்கு அர்ச்சனைகள் மூலஸ்தான அம்மனுக்கு நடத்தப்பட மாட்டாது. கொலுமண்டபத்தில் எழுந்தருளும் அலங்கார அம்மனுக்கு தான் அர்ச்சனைகள் செய்யப்படும் என்ற விபரம் இத்திருக்கோயில் மூலமாக தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும் கொலுசாவடியில் கொலு அலங்கார பொம்மைகள் , சிவபெருமானின் 64 திருவிளையாடல்கள் சம்பந்தமான பொம்மைகள் மற்றும் இதர பொம்மைகளை உபயமாக வழங்குபவர்கள் உள்துறை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் ஒப்படைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும் இன்று (7–ந் தேதி) முதல் 14–ந் தேதி வரை மட்டும் (8.10.21 9.10.21 மற்றும் 10.10.21 வெள்ளி சனி மற்றும் ஞாயிறு கிழமைகள் தவிர்த்து) இத்திருக்கோயிலில் காலை 6.30 மணிக்கு நடை திறக்கப்பட்டு முதல் நாள் மூலஸ்தான அம்மன் அலங்காரத்தை பக்தர்கள் நேரில் கண்டு தரிசனம் செய்வதற்கு ஏதுவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்ற விபரம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

நவராத்திரி அம்மன் அலங்கார விபரம் இன்று வியாழன்கிழமை இராஜராஜேஸ்வரி அலங்காரத்திலும், 8–ந் தேதி வெள்ளிகிழமை ஊஞ்சல் , 9–ந் தேதி சனி கிழமை கோலாட்டம், 10–ந் தேதி ஞாயிற்றுக்கிழமை திருநீலக்கண்ட யாழ்பாணருக்கு தங்கப்பலகை கொடுத்தல், 11–ந் தேதி திங்கள் கிழமை சங்கீத சியாமளை, 12–ந் தேதி செவ்வாய் பாணபத்திரருக்கு திருமுகம் கொடுத்தல், 13–ந் தேதி புதன்கிழமை மகிஷா சுரமர்த்தினி, 14–ந் தேதி வியாழன் கிழமை சிவபூஜை ஆகிய அலங்காரத்திலும் அம்மன் காட்சியருளுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிவகங்கை மாவட்ட கலெக்டர் அலுவலகக் கூட்டரங்கில் ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் நடைபெறவுள்ள ஊரக உள்ளாட்சி தற்செயல் தேர்தலையொட்டி, அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் கலெக்டர் ப.மதுசூதன் ரெட்டி தலைமையில் நடைபெற்றது.

ராமநாதபுரம் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நடைபெற்ற உலக முதியோர் தின விழாவில் கலெக்டர் ஆ.ம.காமாட்சி கணேசன் முதியோர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

தூத்துக்குடியில் கொரோனா தடுப்பூசி போடுக் கொண்ட பொதுமக்களை ஊக்கப்படுத்தும் பொருட்டு 10 நபர்களுக்கு குலுக்கல் முறையில் பட்டுச் சேலை வழங்கப்பட்டது.

பணி நீக்கம் செய்யப்பட்ட செவிலியர்களை மீண்டும் பணி அமர்த்திய அமைச்சர் பெரியசாமி

சின்னாளபட்டி, அக். 7–

தற்காலிகபணியில் இருந்து நிறுத்தப்பட்ட அரசு மருத்துவமனை செவிலியர்களை மீண்டும் பணியில் சேர்த்து அமைச்சர் ஐ.பெரியசாமி உதவி செய்தார். தங்கள் வாழ்வாதாரத்தை காப்பாற்றிய கூட்டுறவுத்துறை அமைச்சர் ஐ.பெரியசாமியை நேரில் சந்தித்த செவிலியர்கள், லேப்டெக்னீசியன் மற்றும் பணியாளர்கள் அமைச்சருக்கு நன்றி தெரிவித்தனர்.

திண்டுக்கல் மாவட்டத்தில் திண்டுக்கல் அரசு மருத்துவமனை, கொரோனா தொற்று பரிசோதனை நிலையம் மற்றும் கொரோனா நோயாளிகள் சிகிச்சை மையங்களில் பணிபுரிவதற்காக ஒப்பந்த அடிப்படையில் செவிலியர்கள், மயக்க மருந்தாளுநர்கள் துப்புரவு பணியாளர்கள், லேப் டெக்னீசியன்கள், பயோ மெடிக்கல் இன்ஜினியர்கள், டேட்டா என்ட்ரி ஆப்ரேட்டர்கள் உட்பட நூற்றுக் கணக்கானோர் 5 மாதங்களுக்கு முன்பு நியமிக்கப்பட்டனர். இவர்களை நேற்றுமுன்தினம் 5ம் தேதி தற்காலிக பணியில் இருந்து நீக்கப்பட்டதாக மாவட்ட மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனை நிர்வாகம் அறிவித்து பணியில் தொடர அனுமதிக்கவில்லை. இதனையடுத்து பாதிப்படைந்த செவிலியர்கள் மற்றும் பணியாளர்கள் நூற்றுக்கணக்கானோர் தமிழக கூட்டுறவுத்துறை அமைச்சர் ஐ.பெரியசாமியை அவர் இல்லத்தில் நேரில் சந்தித்து தங்களை பணியில் மீண்டும் சேர்க்க கோரிக்கை மனு கொடுத்தனர். உடனடியாக கூட்டுறவுத்துறை அமைச்சர், மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியனை தொடர்பு கொண்டு மீண்டும் நிறுத்தப்பட்ட செவிலியர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க வேண்டும் என்றார்.

இதனையடுத்து நேற்று முன்தினம் தற்காலிக பணியிலிருந்து நீக்கப்பட்ட செவிலியர்கள் மற்றும் லேப்டெக்னீசியன் மற்றும் இதர பணியாளர்கள் பணியில் அமர்ந்தனர். நேற்று தமிழககூட்டுறவுத்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களை நேரில் சந்தித்து தங்களின் நன்றியை தெரிவித்த செவிலியர்கள் எந்த ஊர், எந்த தொகுதி என்று விசாரிக்காமலம் திண்டுக்கல் மாவட்டத்தில் நிறுத்தப்பட்ட அனைத்து பணியாளர்களுக்கும் மீண்டும் வேலைவாய்ப்பை வழங்கிய உங்களுக்கு (ஐ.பெரியசாமி) எங்களது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம் என கைகூப்பி நன்றி கூறினர்.

அப்போது செவிலியர்கள் மத்தியில் பேசிய தமிழக கூட்டுறவுத்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி முன்னாள் முதல்வர் கருணாநிதி ஆட்சிக்காலத்தில் இருந்து இன்றுவரை மருத்துவர்கள், செவிலியர்கள் உட்பட அனைத்து சுகாதார பணியாளர்களுக்கு குரல்கொடுத்து வரும் ஒரே இயக்கம் தி.மு.க. தான். தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சியில் உங்களுக்கு என்றும் வேலையிழப்பு இருக்காது என்றதோடு திண்டுக்கல் மாவட்டத்திற்கு வரும் மக்கள் நல்வாழ்த்துறை அமைச்சர் சுப்ரமணியனிடம் இதுகுறித்து பேசுவதாக கூறினார்.

நிகழ்ச்சியின்போது திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. துணைச்செயலாளர் தண்டபாணி, ரெட்டியார்சத்திரம் ஒன்றிய பெருந்தலைவர் ப.க.சிவகுருசாமி, முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் சத்தியமூர்த்தி, ஊராட்சி மன்ற தலைவர் புதுப்பட்டி அருணாச்சலம், பாலம்பாண்டி, புதுப்பட்டி விஜயகுமார், பஞ்சம்பட்டி மணி உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

பழனியில் இருசக்கர வாகனங்களில் ஹெல்மெட் அணிந்து வரும் பொதுமக்களுக்கு மூலிகைச் செடிகள்

பழனி, அக். 7 –

பழனியில் ஹெல்மெட் அணிந்து வரும் இருசக்கர வாகன ஓட்டிகளை ஊக்குவிக்கும் விதமாக பழனி போக்குவரத்து காவல் துறையும் பழனி அரசு சித்த மருத்துவமும் இணைந்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக ஹெல்மெட் அணிந்து வந்த வாகனஓட்டிகளுக்கு மூலிகை செடிகள் வழங்கப்பட்டது.

இதில் போக்குவரத்து காவல் ஆய்வாளர் தட்சிணாமூர்த்தி மற்றும் அரசு சித்த மருத்துவர் மகேந்திரன் தலைமையில் மூலிகைச் செடிகள் வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. தலைக்கவசம் அணியாமல் வந்தவர்களுக்கு தலைக்கவசத்தை பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் தங்ராஜ் எஸ்.ஐ காவலர்கள் கோபாலகண்ணன் செந்தில்குமார் மற்றும்பலர் கலந்து கொண்டனர்.

மதுரை பாண்டியநாடு கூட்டுறவு மேலாண்மை பட்டயப் பயிற்சியில் சேர விண்ணப்பங்கள் வரவேற்பு

மதுரை, அக். 7–

மதுரை பாண்டியநாடு கூட்டுறவு மேலாண்மை நிலையத்தில் 2021–2022–ம் ஆண்டு முழுநேர கூட்டுறவு மேலாண்மை பட்டயப் பயிற்சியில் சேர்வதற்கு விண்ணப்பித்தவர்களுக்கான பயிற்சியாளர் சேர்க்கை தற்போது நடைபெற்று வருகிறது. விண்ணப்பத்திருந்து நாளது தேதி வரை சான்றிதழ் சரிபார்ப்பதற்கு வராத பயிற்சியாளர்கள் கோரப்பட்ட உண்மை சான்றிதழ்களுடன் நேரில் கலந்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது. சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் பயிற்சியாளர்கள் சேர்க்கைக்கான கடைசி நாள் 13.10.2021 மாலை 5 மணி வரை இடம் : பாண்டியநாடு கூட்டுறவுமேலாண்மை நிலையம், திருநகர் 2–வது பேருந்து நிறுத்தம், மதுரை –6 ஆகும்.

தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் சத்தான காய்கறி விதைகள், பழ மரக்கன்றுகள் விற்பனைக்குத் தயார்

மதுரை, அக். 7–

ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் மாடித் தோட்டம், மூலிகை தோட்டம் அமைக்க தேவையான சத்தான காய்கறி விதைகள் மற்றும் மூலிகை, பழ மரக்கன்றுகள் விற்பனைக்கு வந்துள்ளன.

மதுரை மேற்கு தோட்டகலை உதவி இயக்குனர் ஜனரஞ்சனி கூறுகையில், ''காய்கறி தோட்டம் அமைக்க தேவையான பை, தேங்காய் நார்த்துகள்,விதை மற்றும் உரங்கள் அடங்கிய பெட்டி 670 ரூபாய்க்கும் காய்கறி விதைகள் அடங்கிய பை 45 ரூபாய்க்கும் காய்கறி விதை மற்றும் நெல்லி, பப்பாளி கன்றுகள்அடங்கிய தொகுப்பு 75 ரூபாய்க்கும் விற்பனைக்கு வர உள்ளன. விருப்பமுள்ளவர்கள் முன்பதிவு செய்தால் முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படும்,'' என்றார். முன்பதிவுக்கு: 89404 00151 என்ற எண்ணைத் தொடர்பு கொள்ளவும்.

படிவம் எண்.சிஏஏ2
(பிரிவு 230(3) மற்றும் விதி 6 மற்றும் 7–ன் கீழ்)
CA/52/CAA/2021
மற்றும்
நிறுவனங்கள் சட்டம் 2013–ன் பிரிவு 230 முதல் 232 வரை மற்றும் இதர பொருந்தக்கூடிய விதிகளின் விஷயத்தில்
மற்றும்
ஹிம்ஷிகா இன்வெஸ்ட்மெண்ட் லிமிடெட் மற்றும் டால்மியா பாரத் சுகர் அண்ட் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் மற்றும் அந்தந்த பங்குதாரர்கள் மற்றும் கடன் வழங்குபவர்களுடன் ஒருங்கிணைப்புத் திட்டம் குறித்த விஷயத்தில்

டால்மியா பாரத் சுகர் அண்ட் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்
நிறுவனங்கள் சட்டம் 1913ன் கீழ் இணைக்கப்பட்ட ஒரு நிறுவனம்
பதிவு அலுவலகம், டால்மியாபுரம், மாவட்டம் திருச்சிராப்பள்ளி,
தமிழ்நாடு –621651
... டிரான்ஸ்பரீ நிறுவனம்

சம பங்குதாரர்கள், பாதுகாக்கப்பட்ட கடன் வழங்கியவர்கள் மற்றும்
பாதுகாப்பற்ற கடன் வழங்கியவர்களின் கூட்டம் பற்றிய விளம்பர அறிவிப்பு மற்றும் அறிவிப்பு

ஹிம்ஷிகா இன்வெஸ்ட்மெண்ட் லிமிடெட் மற்றும் டால்மியா பாரத் சுகர் அண்ட் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் மற்றும் அந்தந்த பங்குதாரர்கள் மற்றும் கடன் வழங்கியவர்களுடன் ஒருங்கிணைப்புத் திட்டத்தை ('திட்டம்' அல்லது 'இந்த திட்டம்' அல்லது 'திட்டம்') பொருந்தும் பட்சத்தில் மாற்றங்களுடன் அல்லது மாற்றமில்லாமல் ஒப்புதல் அளித்து பரிசீலிப்பதற்காக டால்மியா பாரத் சுகர் அண்ட் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்டின் சம பங்குதாரர்கள், பாதுகாக்கப்பட்ட கடன் வழங்கியவர்கள் மற்றும் பாதுகாப்பற்ற கடன் வழங்கியவர்கள் கூட்டத்தை தனித்தனியே கூட்டுவதற்கு தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயத்தின் ('தீர்ப்பாயம்') சென்னை பெஞ்ச் செப்டம்பர் 22, 2021 அன்று உத்தரவிட்டுள்ளது என்று இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி உத்தரவில் கொடுக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களின்படி மற்றும் அதில் கூறப்பட்டுள்ளபடி, டிரான்ஸ்பரீ நிறுவனத்தின் சம பங்குதாரர்கள், பாதுகாக்கப்பட்ட கடன் வழங்கியவர்கள் மற்றும் பாதுகாப்பற்ற கடன் வழங்கியவர்கள் கூட்டம் தனித்தனியே கீழ்கண்ட நேரத்தில் நடைபெறும். எனவே, அந்தந்த சம பங்குதாரர்கள், பாதுகாக்கப்பட்ட கடன் வழங்கியவர்கள் மற்றும் பாதுகாப்பற்ற கடன் வழங்கியவர்கள் (பொருந்தும் என்றால்) கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் என்று மேலும் இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுகிறது:

வ. எண்	கூட்டம்	தேதி	வாக்களிக்கும் முறை	நேரம்	குறைந்தபட்ச எண்ணிக்கை
1	சமபங்குதாரர்கள்	நவம்பர் 10, 2021	மின்னணு வாக்குப்பதிவு	காலை 11.00 மணி	200 சம பங்குதாரர்கள்
2	பாதுகாக்கப்பட்ட கடன் வழங்குபவர்கள்			மாலை 2.00 மணி	2 பாதுகாக்கப்பட்ட கடன் வழங்கியவர்கள்
3	பாதுகாப்பற்ற கடன் வழங்குநர்கள்			மாலை 3.00 மணி	150 பாதுகாப்பற்ற கடன் வழங்கியவர்கள்

நியமிக்கப்பட்ட நேரத்தில் குறிப்பிட்ட உறுப்பினர்கள் இல்லையென்றால், கூட்டம் அரை மணிநேரத்திற்கு ஒத்திவைக்கப்படும். அதன்பிறகு, சம பங்குதாரர்கள், பாதுகாக்கப்பட்ட கடன் வழங்கியவர்கள் மற்றும் பாதுகாப்பற்ற கடன் வழங்கியவர்கள் (பொருந்தும் என்றால்) பங்கேற்று வாக்களித்தால் அது குறைந்தபட்ச எண்ணிக்கையாக கருத்தில் கொள்ளப்படும்.

கார்ப்பரேட் விவகாரங்கள் அமைச்சகத்தின் ("எம்சிஏ") முறையே ஏப்ரல் 08, ஏப்ரல் 13, 2020 மற்றும் மே 05, 2020 தேதியிட்ட பொது சுற்றறிக்கை(கள்) எண்கள்.14,17 மற்றும் 20 மற்றும் 2 ஜனவரி, 2021 தேதியிட்ட எம்சிஏ பொது சுற்றறிக்கை மற்றும் இதர பொருந்தக்கூடிய விதிகளின்படி கூட்டம் நடைபெறும்.

டிரான்ஸ்பரீ நிறுவனம், அதன் சம பங்குதாரர்கள், பாதுகாக்கப்பட்ட கடன் வழங்கியவர்கள் மற்றும் பாதுகாப்பற்ற கடன் வழங்கியவர்களுக்கு மின்னணு வாக்களிக்கும் வசதியை வழங்குகிறது. அதன் விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

விபரங்கள்	சமபங்குதாரர்கள்	பாதுகாக்கப்பட்ட கடன் வழங்கியவர்கள்	பாதுகாப்பற்ற கடன் வழங்கியவர்கள்
மின்னணு முறையில் அனுப்பும் பணி முடிவுற்ற தேதி	திங்கட்கிழமை, அக்டோபர் 04, 2021	திங்கட்கிழமை, அக்டோபர் 04, 2021	திங்கட்கிழமை, அக்டோபர் 04, 2021
காகித வடிவில் அனுப்பும் பணி முடிவுற்ற தேதி	புதன்கிழமை, அக்டோபர் 06, 2021	புதன்கிழமை, அக்டோபர் 06, 2021	புதன்கிழமை, அக்டோபர் 06, 2021
தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு துவங்கும் தேதி மற்றும் நேரம்	வெள்ளிக்கிழமை, நவம்பர் 05, 2021 அன்று காலை 9.00 மணி	திங்கட்கிழமை, அக்டோபர் 11, 2021 அன்று காலை 9.00 மணி	திங்கட்கிழமை, அக்டோபர் 11, 2021 அன்று காலை 9.00 மணி
தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு முடிவுறும் தேதி மற்றும் நேரம்	செவ்வாய்க்கிழமை, நவம்பர் 09, 2021 அன்று மாலை 5.00 மணி வரை	செவ்வாய்க்கிழமை, நவம்பர் 09, 2021 அன்று மாலை 5.00 மணி வரை	செவ்வாய்க்கிழமை, நவம்பர் 09, 2021 அன்று மாலை 5.00 மணி வரை
வாக்குப்பதிவு கணக்கிடப்படும் கட்ஆப் தேதி	நவம்பர் 04,2021	ஜூலை 31, 2021	ஜூலை 31, 2021

மின்னணு முறையிலான தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு நவம்பர் 09, 2021 அன்று இந்திய நேரப்படி மாலை 5.00 மணிக்கு மேல் அனுமதிக்கப்படமாட்டாது.

தொலைதூர மின்னணு வாக்களிப்பு வசதியை பயன்படுத்தி வாக்களித்த சம பங்குதாரர்கள், பாதுகாக்கப்பட்ட கடன் வழங்கியவர்கள் மற்றும் பாதுகாப்பற்ற கடன் வழங்கியவர்கள் கூட்டத்தில் கலந்து கொள்ளலாம். ஆனால், கூட்டத்தில் அவர்கள் மீண்டும் வாக்களிக்க அனுமதிக்கப்படமாட்டார்கள். தொலைதூர மின்னணு வாக்களிப்பு மூலம் வாக்களிக்காத சம பங்குதாரர்கள், பாதுகாக்கப்பட்ட கடன் வழங்கியவர்கள் மற்றும் பாதுகாப்பற்ற கடன் வழங்கியவர்கள் கூட்டத்தில் மின்னணு முறையில் வாக்களிக்கலாம்.

ஒரு தீர்மானத்தின் மீது வாக்களித்த சம பங்குதாரர்கள், பாதுகாக்கப்பட்ட கடன் வழங்கியவர்கள் மற்றும் பாதுகாப்பற்ற கடன் வழங்கியவர்கள் அதை மாற்றி வாக்களிக்கவோ அல்லது மீண்டும் வாக்களிக்கவோ அனுமதிக்கப்படமாட்டார்கள்.

மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யாத சம பங்குதாரர்கள், பாதுகாக்கப்பட்ட கடன் வழங்கியவர்கள் மற்றும் பாதுகாப்பற்ற கடன் வழங்கியவர்கள் http://karisma.kfintech.com/emailreg in-ஐ கிளிக் செய்து அவர்களது மின்னஞ்சல் முகவரி மற்றும் மொபைல் எண்ணை நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவரிடம் ("ஆர்டிஏ") தற்காலிகமாக பதிவு செய்து கொள்ளலாம். ஏதேனும் சேவைகள் இருந்தால், சம பங்குதாரர்கள், பாதுகாக்கப்பட்ட கடன் வழங்கியவர்கள் மற்றும் பாதுகாப்பற்ற கடன் வழங்கியவர்கள் einward.ris@kfintech.com-க்கு எழுதலாம்.

காகித வடிவத்தில் பங்குகளை வைத்திருக்கும் நபர் மற்றும் தனிநபர் அல்லாத பங்குதாரர்கள், அறிவிப்பு அனுப்பிய பின் நிறுவனத்தின் பங்குகளைப் பெற்று நிறுவனத்தின் பங்குதாரர் ஆனவர் மற்றும் கட்ஆப் தேதியின்போது பங்குகளை வைத்திருப்பவர்கள் evoting@kfintech.com-ல் ஒரு கோரிக்கையை அனுப்புவதன் மூலம் உள்நுழைவு ஐடி மற்றும் கடவுச்சொல்லைப் பெறலாம். இருப்பினும், அவர் ஏற்கனவே தொலைதூர மின்னணு வாக்குப்பதிவிற்காக KFintech-ல் பதிவுசெய்திருந்தால், அவர் ஏற்கனவே உள்ள பயனர் ஐடி மற்றும் கடவுச்சொல்லைப் பயன்படுத்தி வாக்களிக்கலாம்.

தொலைதூர மின்னணு வாக்களிப்பு குறித்த நடைமுறைகளுடன் கூடிய கூட்டம் குறித்து அறிவிப்பு சம பங்குதாரர்கள், பாதுகாக்கப்பட்ட கடன் வழங்கியவர்கள் மற்றும் பாதுகாப்பற்ற கடன் வழங்கியவர்களுக்கு மின்னணு முறையிலும் மற்றும் காகித வடிவிலும் (மின்னஞ்சல் முகவரி கிடைக்காதவர்களுக்கு) அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலும் இவை நிறுவனத்தின் இணையதளம் www.dalmiasugar.com மற்றும் பங்குமாற்று முகவரின் இணையதளம் https://evoting.kfintech.com-லும் கிடைக்கும்.

மின்னணு வாக்களிப்புடன் தொடர்புடைய மேலும் ஏதேனும் விளக்கங்கள்/குறைகளுக்கு, https://evoting.kfintech.com-ல் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (FAQs) மற்றும் பங்குதாரர்களுக்கான மின்னணு வாக்குப்பதிவு பயனர் கையேட்டை நீங்கள் பார்க்கலாம் அல்லது கேபின் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் தொலைபேசி எண். 18003454001 (கட்டணம் இல்லாதது) அல்லது திருமதி. ஆஷிமா வி. கன்னா, கம்பெனி செயலாளர், 11 மற்றும் 12வது தளம், ஹன்சாலயா பில்டிங், 15, பாராகம்பா சாலை, புதுடெல்லி 110001, தொலைபேசி எண்: 011 23465100, மின்னஞ்சல் முகவரி: corp.sec@dalmiabharat.com; Khanna.ashima@dalmiasugar.com-ல் தொடர்பு கொள்ளலாம்.

நிறுவனங்கள் சட்டம் 2013 பிரிவு 230 மற்றும் இதர பொருந்தக்கூடிய விதிகள் மற்றும் நிறுவனங்கள் (சமரசம், சீரமைப்பு மற்றும் ஒருங்கிணைப்பு) விதிகள் 2016 ஆகியவற்றின் கீழ் திட்டம் குறித்த நகல் மற்றும் அறிக்கையை எந்தவித கட்டணமும் இல்லாமல் கூட்டம் நடைபெறும் தேதிக்கு முன்னதாக எந்தவொரு வேலை நாளிலும் (சனிக்கிழமைகள் தவிர) டிரான்ஸ்பரீ நிறுவனத்தின் பதிவு அலுவலகம் : டால்மியாபுரம், திருச்சி மாவட்டம், தமிழ்நாடு 621 651 ("பதிவு அலுவலகம்") மற்றும்/அல்லது வழக்கறிஞர், திரு. பவன் ஜெயின் அவர்களின் பதிவு அலுவலகம்: புதிய எண்.115, லஸ் சர்ச் சாலை, மைலாப்பூர், சென்னை 600 004 என்ற முகவரியில் இருந்து பெறுக் கொள்ளலாம்.

மேற்கண்ட கூட்டத்திற்கான தலைவராகவும் ஆராய்வாளராகவும் கீழ்க்கையொப்பமிட்டுள்ள எஸ். விஜயராகவன் அவர்களையும், அவருக்கு மாற்றாக மேற்கண்ட கூட்டத்திற்கான தலைவராகவும் ஆராய்வாளராகவும் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் திரு. எஸ். வெங்கடேஸ்வரன் அவர்களையும் தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயம் நியமித்துள்ளது.

மேற்சொன்ன திட்டத்திற்கு அந்தந்த கூட்டங்களில் ஒப்புதல் அளிக்கப்பட்டால், அதனை தொடர்ந்து அது தீர்ப்பாயத்தின் ஒப்புதல் மற்றும் தேவைப்படக்கூடிய வேறு எந்த ஒப்புதல்களுக்கும் உட்பட்டதாகும்.

6 அக்டோபர், 2021 அன்று தேதியிடப்பட்டது

டால்மியா பாரத் சுகர் அண்ட் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்டிற்காக
ஒப்பம்/–
எஸ் விஜயராகவன்
கூட்டத்திற்கு நியமிக்கப்பட்டுள்ள தலைவர்

ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட்

homefirst
We'll take you home
CIN:U65990MH2010PTC240703
இணையதளம்: homefirstindia.com
தொலைபேசி எண்.: 180030008425 இமெயில் ஐடி: loanfirst@homefirstindia.com

பிரிவு 13(2)ன் கீழ் கோரிக்கை அறிவிப்பு

[illegible]

வ. எண்	கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாததாரர்(கள்) பெயர் மற்றும் முகவரி	செயல்படுத்தப்பட வேண்டிய பத்திரங்களின் விவரங்கள்	கோரிக்கை அறிவிப்பு தேதியன்று பாக்கித் தொகை மற்றும் மேலும் வட்டி, இதர செலவினங்கள் (ரூபாயில்)
1	[illegible]	[illegible]	[illegible]
2	[illegible]	[illegible]	[illegible]
3	[illegible]	[illegible]	[illegible]
4	[illegible]	[illegible]	[illegible]

[illegible]

இடம்: திருச்சி
தேதி: 07/10/2021

கையொப்பம்: அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட்

ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட்

homefirst
We'll take you home
CIN:U65990MH2010PTC240703
இணையதளம்: homefirstindia.com
தொலைபேசி எண்.: 180030008425 இமெயில் ஐடி: loanfirst@homefirstindia.com

பிரிவு 13(2)ன் கீழ் கோரிக்கை அறிவிப்பு

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரராகிய நீங்கள் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தை அடமானம் வைத்ததன் மூலம் கடனைப் பெற்றுள்ளீர்கள். மேலும் கடன் ஒப்பந்தத்திற்கு கடன்தாரர்/இணை கடன்தாரர் என நீங்கள் கீழே குறிப்பிட்டுள்ளீர்கள். நீங்கள் வாங்கிய கடன் தொகையை திரும்ப செலுத்த தவறியதன் விளைவாக, 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துகளை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழ் (சுருக்கமாக SARFAESI சட்டம்) உங்கள் கடன் கணக்கு 03/10/2021 அன்று செயல்படாத சொத்து என வகைப்படுத்தப்பட்டுள்ளது. ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட் ஆகிய நாங்கள், நீங்கள் வழங்கிய முகவரிக்கு SARFAESI சட்டத்தின் பிரிவு 13 (12) மற்றும் பிரிவு13(2)ன் கீழ் கோரிக்கை அறிவிப்பை வெளியிட்டுள்ளோம். 03/10/2021 அன்று மேற்சொன்ன அறிவிப்புகள் வெளியிடப்பட்டது மற்றும் உங்களுக்கு அளிக்கப்பட்ட பல்வேறு கடன்களை திரும்ப செலுத்துவதிலிருந்து நீங்கள் தவறிவிட்டீர்கள் என்று மேற்சொன்ன அறிவிப்புகளில் கூறப்பட்டுள்ளது. எனவே, SARFAESI சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 2002ன் விதி 3(1)ன்படி அறிவிப்பு வழங்குவதற்காக தற்போதைய வெளியீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வ. எண்	கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாததாரர்(கள்) பெயர் மற்றும் முகவரி	செயல்படுத்தப்பட வேண்டிய பத்திரங்களின் விவரங்கள்	கோரிக்கை அறிவிப்பு தேதியன்று பாக்கித் தொகை மற்றும் மேலும் வட்டி, இதர செலவினங்கள் (ரூபாயில்)
1	[illegible]	[illegible]	[illegible]

ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட்டிற்கு செலுத்த வேண்டிய மேற்கூறிய தொகை மற்றும் வட்டியை இந்த அறிவிப்பை வெளியிட்ட நாளிலிருந்து 60 நாட்களுக்குள் திரும்ப செலுத்த நீங்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். அவ்வாறு செலுத்த தவறும்பட்சத்தில் கடன்தாரர்கள், அடமானதாரர்கள் மற்றும் உத்தரவாததாரர்களின் ஈடுபெற்ற சொத்துக்களை சுவாதீனம் எடுத்தல் உட்பட ஏதாவது அல்லது அனைத்து ஈடுபெற்ற சொத்துகளுக்கு எதிராக சட்டத்தின் கீழ் தேவையான நடவடிக்கையை ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட் மேற்கொள்ளும். (1) குத்தகை மூலம் மாற்றுவதற்கான உரிமைகள், ஈடுபெற்ற சொத்துக்களை விடுவிக்க விற்பனை ஒதுக்கீடு உட்பட கடன்தாரர்கள்,உத்தரவாததாரர்களின் ஈடுபெற்ற சொத்துக்களை சுவாதீனம் எடுத்துக் கொள்ளும் உரிமை (2) குத்தகை, ஒதுக்கீடு அல்லது விற்பனை மற்றும் ஈடுபெற்ற சொத்துக்களை விடுவித்தல் மற்றும் உங்களால் மாற்றப்பட்ட ஈடுபெற்ற சொத்துக்கள் தொடர்பான அனைத்து உரிமைகள் கொண்டு ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட்டினால் ஈடுபெற்ற சொத்துக்களை மாற்றுதல் உள்பட ஈடுபெற்ற சொத்துக்களின் நிர்வாகத்தை எடுத்துக் கொள்ளுதல் போன்றவற்றை உள்ளடக்கி நடவடிக்கை மேற்சொன்ன சட்டத்தின் கீழ் ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட்டிற்கு உரிமை உள்ளது.

மேற்சொன்ன சட்டப்பிரிவு 13(13)ன்படி, ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட்டின் முன் அனுமதியின்றி ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட்டில் அடமானம் வைக்கப்பட்டுள்ள மேற்குறிப்பிட்டுள்ள எந்த ஒரு ஈடுபெற்ற ஆஸ்திகளை விற்பனை செய்தல், குத்தகைக்கு விடுதல் அல்லது இதர வகையில் மாற்றம் மேற்கொள்வதன் மூலம் (உங்கள் வணிகத்தின் சாதாரண போக்கைத் தவிர) மாற்றல் போன்றவற்றை மேற்கொள்ள உங்களுக்கு இதன் மூலம் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இடம்: மதுரை
தேதி: 07/10/2021

கையொப்பம்: அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட்